# கிறிஸ்தவ சபையே விழிமின்! எழுமின்!



IEMT வெளியீடு

## கிறிஸ்தவ சபையே விழிமின்! எழுமின்! அறிமுகம்

எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப்போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு. (புலம்பல் 2:19)

### 1) நடைமுறை எடுத்துக்காட்டுகள்

என் நண்பராக இருக்கும் ஒரு கிறிஸ்தவ போதகர் ஒரு நாள் என்னிடம் வந்து, ''இஸ்லாம் பற்றி சிறிது விளக்கமுடியுமா?'' என்று கேட்டார். அவரிடம் நான், ''ஏன் இப்படி திடீரென்று கேட்கிறீர்கள்?'' என்று கேட்டேன். அதற்கு அவர், ''என் சபையில் சில விசுவாசிகளுக்கு இஸ்லாமியர்கள் நண்பர்களாக இருக்கிறார்கள். இந்த இஸ்லாமியர்கள் கேட்கும் சில கேள்விகளை அப்படியே வந்து என்னிடம் விசுவாசிகள் கேட்கிறார்கள். ஆகையால், இஸ்லாம் பற்றி தெரிந்து வைத்துக்கொண்டால் நல்லது என்று நினைத்து உங்களிடம் வந்தேன்'' என்று கூறினார்.

இன்னொரு முறை நானும் என் சபையில் இருக்கும் இன்னொரு சகோதரரும் ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டு இருந்தோம். அப்போது திடீரென்று அந்த சகோதரர், குர்-ஆனின் அல்லாஹ்வும், நம்முடைய யெகோவா தேவனும் ஒன்று (இருவரும் ஒருவரே) என்று இஸ்லாமியர்கள் சொல்கிறார்கள் இது உண்மையா? என்று என்னிடம் கேட்டார்.

எங்கள் சபையில் இருக்கும் ஒரு சகோதரி ஒரு கடைக்குச் சென்றார்கள், அந்த கடைக்காரர் ஒரு இஸ்லாமியர். இந்தச் சகோதரி ஒரு கிறிஸ்தவர் என்பதை அறிந்த அவர், அந்த சகோதரியிடம் சில நிமிடங்கள் பேசினார் மற்றும் சில இஸ்லாமிய புத்தகங்கள் கொடுத்தார். அந்த சகோதரி அந்த புத்தகங்கள் அனைத்தையும் கொண்டு வந்து என்னிடத்தில் கொடுத்துவிட்டார்கள்.

என் கிறிஸ்தவ நண்பர் மூலம் அறிந்த இன்னொரு விவரம் என்னவென்றால், கல்லூரிகளில் படிக்கும் கிறிஸ்தவ பெண் பிள்ளைகளிடம், அதே கல்லூரியில் படிக்கும் இஸ்லாமிய ஆண்கள் பேச்சு கொடுத்து, கொஞ்சம் கொஞ்சமாக அவர்களிடம் கிறிஸ்தவம் பற்றி பேசி, அவர்களை குழப்புகிறார்கள். இதனால் குழப்பமடைந்த அந்த சகோதரிகள், குடும்ப நபர்களிடம் அல்லது தாங்கள் செல்லும் சபை போதகர்களிடம் இஸ்லாம் பற்றியும், கிறிஸ்தவம் பற்றியும் கேள்விகளை கேட்கிறார்கள் என்பதை அறிந்தேன்.

ஆக, கிறிஸ்தவ பெற்றோர்கள் முக்கியமாக கிறிஸ்தவப் போதகர்கள் இஸ்லாம் பற்றி அறிந்துக்கொள்ளவேண்டிய கால கட்டத்தில் இருக்கிறார்கள்.

### 2) கிறிஸ்தவ போதகர்களும் ஞானமும்:

ஒரு கால கட்டத்தில் கிறிஸ்தவ மிஷனரிகளும், சபை போதகர்களும் புது மொழிகளை கற்று, பைபிளை அந்த மொழிகளில் மொழிப்பெயர்க்கும் பொறுப்பை ஏற்று அயராது உழைத்தார்கள். இரவு பகல் என்று பாராமல் பல ஆண்டுகள் உழைத்து புதிய மொழிகளில் பைபிளை மொழியாக்கம் செய்து மக்கள் தங்கள் சொந்த மொழியில் தேவனுடைய வார்த்தையை படிக்க உதவினார்கள். அவர்களின் உழைப்பினாலே, நூற்றுக்கணக்கான மொழிகளில் பைபிள் மொழியாக்கம் செய்யப்பட்டது.

ஆனால், இன்றுள்ள ஊழியர்களுக்கு உள்ள ஒரு பொறுப்பு என்னவென்றால், பைபிளை மட்டும் கற்று தங்கள் சபை அங்கத்தினர்களுக்கு பரலோக மன்னாவை கொடுப்பதோடு மட்டும் நின்று விடாமல், இஸ்லாம் போன்ற மதங்கள் பற்றி அறிந்துக்கொண்டு தங்களிடம் சபை விசுவாசிகள் கேட்கும் கேள்விகளுக்கு பதில்களை தரவேண்டும் என்பது தான்.

ஒவ்வொரு கிறிஸ்தவ போதகரும் உலகத்தில் இரண்டாவது மிகப்பெரிய மதமாக உள்ள இஸ்லாம் பற்றி அறிந்துக்கொள்ள வேண்டும். இஸ்லாமியர்கள் தீர்க்கதரிசி என்று நம்பும் முஹம்மது பற்றி அறிந்து கொள்ளவேண்டும். இஸ்லாமியர்களின் வேதமாகிய ''குர்-ஆனை''ப் பற்றியும் அறிந்து கொள்ளவேண்டும். ஒரு போதகர் இஸ்லாம் பற்றி அறிந்து கொண்டால், அந்த சபையே இஸ்லாம் பற்றி அறிந்துக்கொண்டதற்கு சமமாகும். தற்காலத்தில் சபை போதகர்களிடம் விசுவாசிகள் ஞானத்தை தேடுகிறார்கள். வேதமும் இதனை நமக்குச் சொல்லவில்லையா?

ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும் வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன் (மல்கியா 2: 7).

அப்படியே ஞானத்தை அறிந்துகொள்வது உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும் அதைப் பெற்றுக்கொண்டால், அது முடிவில் உதவும், உன் நம்பிக்கை வீண்போகாது (நீதிமொழிகள் 24:14).

என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள் நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன் (ஓசியா 4:6).

தங்கள் சபை போதகருக்கு எல்லாமே தெரிந்து இருக்கவேண்டும் என்று விசுவாசிகள் எண்ணுகின்றார்கள். தங்கள் சபை போதகர் ஒரு நடமாடும் நூல்நிலையம் என்றும், ஒரு கலைக் களஞ்சியம் என்றும் எண்ணுகிறார்கள். (அனேக கிறிஸ்தவ போதகர்கள் நடமாடும் நூல் நிலையங்களாக திகழ்வதையும் நாம் காணமுடிகிறது.)

இதனால் அனேக கேள்விகளைக் கொண்டு சபைப் போதகரை துளைத்துவிடுகிறார்கள். இதர உலக விவரங்கள் பற்றி தெரியாமல் இருந்தாலும் பரவாயில்லை, ஆனால், இஸ்லாம் பற்றி ஒவ்வொரு

கிறிஸ்தவ போதகரும் ஓரளவாவது தெரிந்து இருக்கவேண்டும் என்பது என் கருத்து.

இந்த "கிறிஸ்தவ சபையே விழிமின் எழுமின்" என்ற தலைப்பில் தொடர்கட்டுரைகள், கிறிஸ்தவ போதகர்களுக்கு இஸ்லாம் பற்றிய அடிப்படை அறிவை தரும் என்ற நோக்கில், கேள்வி பதில் கோணத்தில் எழுதப்படுகிறது.

தொடர்ச்சியாக நிறுத்தாமல் நூற்றுக்கணக்கான பத்திகள் மூலம் விவரங்களைச் சொல்லாமல், ஒரு கிறிஸ்தவ போதகரும், நானும் உரையாடியது போல இந்த கட்டுரைகள் வடிவமைக்கப்படுகிறது. இவைகள் கிறிஸ்தவ உலகிற்கு உபயோகமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

## காட்சி - 1

(ஒரு கிறிஸ்தவ போதகரின் சபையிலிருந்த ஒரு விசுவாசி சில நாட்களாக சபைக்கு வரவில்லை. என்ன ஆனது என்று தெரிந்துக்கொள்ள அந்த விசுவாசிக்கு போன் செய்து பேசும் போது, அந்த விசுவாசி அனேக இஸ்லாமிய கேள்விகளை கேட்பதாக தெரிந்தது. அந்த விசுவாசிக்கு யாரோ இஸ்லாம் பற்றிய அறிவை புகட்டியுள்ளார்கள் என்பது மட்டும் தெளிவாக புரிந்தது. அந்த போதகரிடம் இப்போது நாம் உரையாடுவோம்)

**போதகர்:** பிரதர்! வணக்கம்.

**உமர்:** வணக்கம் பாஸ்டர். எப்படி இருக்கீங்க?

**போதகர்:** கர்த்தரின் கிருபையால் சுகமா இருக்கிறேன். நீங்க எப்படி இருக்கீங்க?

**உமர்:** நானும் கர்த்தரின் கிருபையால் சுகமாக இருக்கிறேன். திடீரென்று வந்திருக்கீங்க? என்ன விஷயம் சொல்லுங்க?

**போதகர்:** "இஸ்லாம் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கு" நடக்குது, வந்து பாருங்க என்று நீங்க ரொம்ப நாளா சொல்லிக்கிட்டு இருக்கீங்க. நான் தான் ஏதோ ஒரு காரணம் சொல்லி வராமல் இருந்தேன். ஆனால், இப்போ அதுக்கு நேரம் வந்திருக்கு. அதனால் தான் உங்ககிட்டே வந்து பேசிட்டு போகலாம் என்று வந்தேன்.

**உமர்:** அப்படியா! ரொம்ப சந்தோஷமான விஷயம் தான். ஆனால், இஸ்லாம் பற்றி அறிந்துக்கொள்ள இந்த ஆர்வம் எப்படி திடீரென்று வந்துச்சு?

**போதகர்:** எங்க சபை விசுவாசி ஒருத்தர், இஸ்லாம் பற்றி பல கேள்விகள் கேட்கிறார், ஹசரத் முஹம்மது கடைசி தீர்க்கதரிசியா என்று கேட்கிறார்? இயேசு இறைவனா அல்லது ஒரு தீர்க்கதரிசியா? என்று கேட்கிறார். நமக்கு பைபிள் பற்றி மட்டுமே தெரியும், இஸ்லாம் பற்றி ஒன்றுமே தெரியாது மட்டுமல்ல, கிறிஸ்தவத்திற்கும் இஸ்லாமுக்கும் இடையே இருக்கும் அடிப்படை ஒற்றுமைகள், வித்தியாசங்கள் கூட தெரியாது. இப்படி இருக்கும் போது எப்படி நான் பதில் சொல்றது? அதனால் தான் உங்ககிட்டே வந்தேன்.

**உமர்:** இப்போ எனக்கு புரியுது. உங்க கேள்விகள் என்ன? கேளுங்க பாஸ்டர்.

**போதகர்:** என்னுடைய முதல் கேள்வி, "இஸ்லாம் பற்றி அறிந்துக்கொள்ள நான் எந்த புத்தகத்தை படிக்கவேண்டும்? முஸ்லிம்கள் தங்கள் வேதம் என்றுச் சொல்லும் "குர்-ஆனை" படித்தால் போதுமா?

**உமர்:** நீங்க இஸ்லாமை அறிந்துக்கொள்ள உங்களுக்கு "குர்-ஆன்" மட்டும் உதவாது. குர்-ஆனை மட்டும் நீங்க படித்தால் குழப்பத்தைத் தவிர வேறு ஒன்றும் வராது. இஸ்லாமை பற்றி அறிந்துக்கொள்ள குர்-ஆனை மட்டும் நாம் படித்தால், நாம் உயிரற்ற ஒரு சடலத்தோடு பேச முயற்சிப்பதற்கு சமமாகும். ஒரு சடலம் பார்ப்பதற்கு எந்த ஒரு குறையும் இல்லாமல், கண் காது மூக்கு என்று எல்லா பாகங்களை கொண்டதாக இருந்தாலும், உயிர் இல்லையானால் என்ன உபயோகம். அது போலத் தான் வெறும் குர்-ஆனை படித்தால் நீங்கள் இஸ்லாமை முழுவதுமாக அறிந்துக்கொள்ள முடியாது.

**போதகர்:** ஏன் அப்படி? கிறிஸ்தவம் பற்றி ஒருவர் அறிய, புதிய ஏற்பாட்டை தொடர்ச்சியாக படித்தால் போதுமே, பெரும்பான்மையான எல்லா விவரங்களையும் அறிந்துக்கொள்ளலாம். அது போல, குர்-ஆனைப் படித்தால் இஸ்லாம் பற்றி அறிந்துக்கொள்ள முடியாதா?

**உமர்:** முடியாது. நீங்கள் ஒரு நாளைக்கு எத்தனை முறை தொழுது கொள்கிறீர்கள் என்று ஒரு முஸ்லீமிடம் கேட்டுப்பாருங்க. அவர் ஐந்து முறை என்று பதில் சொல்லுவார். ஆனால், குர்-ஆனில் ஐந்துமுறை தொழவேண்டும் என்று எங்கு சொல்லப்பட்டுள்ளது என்று கேளுங்க. அவரால் குர்-ஆனைக் கொண்டு மட்டும் பதில்

சொல்லமுடியாது. இப்படி அடிப்படை இஸ்லாமிய கோட்பாடுகள், இஸ்லாமிய சட்டங்கள், தொழுகை நடத்தவேண்டிய முறைகள் போன்ற விவரங்களை நாம் குர்-ஆனில் காணமுடியாது.

**போதகர்:** அப்படியானால், குர்-ஆனை மட்டும் படித்தால் நாம் இஸ்லாம் பற்றி முழுவதுமாக அறிந்துக்கொள்ள முடியாது என்கிறீர்கள். ஏன் இந்த நிலை?

**உமர்:** நாம் பைபிளில் படிப்பது போல, நிகழ்ச்சிகள் கோர்வையாக குர்-ஆனில் சொல்லப்படவில்லை.
குர்-ஆனில்:

1) ஆங்காங்கே விவரங்கள் சொல்லப் பட்டுள்ளது.
2) ஒரு கோர்வையாக விவரங்கள் வரிசையாக சொல்லப்படவில்லை.
3) குர்-ஆனில் பைபிளிலிருந்து சில நிகழ்ச்சிகளை குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது, அப்படி சொல்லப்பட்ட நிகழ்ச்சிகள் கூட முழுவதுமாக சொல்லப்படாமல் பாதி விவரங்கள் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது.
4) இந்த நிகழ்ச்சிகளை முழுவதுமாக அறிந்துக்கொள்ள பைபிளை படித்தால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.
5) "குர்-ஆன் வசனங்கள்" சொல்லப்பட்ட பின்னணி குர்-ஆனில் சொல்லப்படவில்லை.
6) இஸ்லாமிய தீர்க்கதரிசியாகிய ஹசரத் முஹம்மது பற்றிய விவரங்களை கூட நாம் முழுவதுமாக குர்-ஆனில் காண முடியாது.

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். ஆகையால், இஸ்லாம் பற்றிய 50 சதவிகித அறிவு கூட நமக்கு குர்-ஆனை மட்டும் படித்தால் கிடைக்காது.

**போதகர்:** அப்படியானால், இஸ்லாமை அறிந்துக்கொள்ள என்ன தான் வழி? வேறு ஏதாவது புத்தகம் உண்டா?

**உமர்:** உண்டு. குர்-ஆனுக்கு உயிர் ஊட்டும் புத்தகங்கள் இஸ்லாமில் உண்டு. அவைகளை கீழ்கண்டவாறு பிரிக்கலாம்:

1) ஹதீஸ்கள் (முஹம்மது பேசியவைகளும், செய்தவைகளும்)
2) முஹம்மதுவின் வாழ்க்கை வரலாற்று நூல்கள்
3) இஸ்லாமிய அறிஞர்கள் எழுதிய "குர்-ஆன் விரிவுரைகள் (தப்ஸீர்கள்)".

இவைகள் அனைத்தையும் படித்தால் தான், நாம் ஓரளவிற்கு இஸ்லாம் பற்றி அறிந்துக்கொள்ள முடியும்.

**போதகர்:** என்னது! ஓரளவிற்கு தான் அறிந்துக்கொள்ள முடியுமா? முழுவதுமாக அறிந்துக்கொள்ள முடியாதா?

**உமர்:** இஸ்லாம் வந்து 1400 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது, இன்னும் இஸ்லாமியர்களே இஸ்லாமை முழுவதுமாக அறிந்துக்கொள்ளவில்லை, நீங்க அவ்வளவு சீக்கிரமாக அறிந்துக்கொள்ள முடியுமா என்ன?

தமிழ் நாட்டிலே பாருங்க. நாங்க தான் உண்மையான முஸ்லீம்கள் என்று ஒரு குழு சொல்லும், இன்னொரு குழு நாங்க தான் உண்மையான முஸ்லீம்கள் என்றுச் சொல்லும். இந்த ஹதீஸ் தவறு என்று ஒரு குழு சொல்லும், இல்லை இல்லை அது சரியான ஹதீஸ் என்று இன்னொரு குழு சொல்லும்.

ஆகவே, இஸ்லாம் பற்றி 100% அறிந்துக்கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தை மட்டும் விட்டுடுங்க. ஆனால், கிறிஸ்தவர்களாகிய நாம் இஸ்லாம் பற்றி தேவையான அளவிற்கு மட்டும் அறிந்துக்கொண்டால் போதும்.

**போதகர்:** குர்-ஆன், ஹதீஸ்கள், சரித்திர நூல்கள், குர்-ஆன் விரிவுரைகள் என்று அனேக புத்தகங்களை படிப்பதைக் காட்டிலும், தற்காலத்தில் ஒரு சில இஸ்லாமியர்கள் எழுதிய புத்தகங்களை நாம் படித்தால் இஸ்லாம் பற்றி முழுவதுமாக அறிந்துக்கொள்ள முடியாதா?

**உமர்:** உங்களிடம் ஒரு நூறு ரூபாய் நோட்டு உள்ளதா? அந்த நோட்டில் ஒரு பக்கம் பிரிண்ட் உள்ளதா அல்லது இரண்டு பக்கமும் பிரிண்ட் உள்ளதா? இரண்டு பக்கமும் பிரிண்ட் இருந்தால் தான் அது செல்லுபடியாகும். ஒரு பக்கம் மட்டும் பிரிண்ட்டான ரூபாய் நோட்டுக்களை அரசாங்கம் *கள்ள நோட்டுக்கள்* என்றுச் சொல்லும், அது செல்லுபடியாகாது.

அதுபோல, இஸ்லாமியர்கள் எழுதும் புத்தகங்களை மட்டும் நீங்கள் படித்தால், நீங்கள் இஸ்லாமின் ஒரு பக்கத்தை மட்டுமே அறிய முடியும். இஸ்லாமின் இன்னொரு பக்கத்தை அறிய முடியாது. இஸ்லாமின் இரண்டு பக்கங்களையும் அறியவேண்டுமென்றால் குர்-ஆன், ஹதீஸ்கள் இஸ்லாமிய சரித்திர நூல்கள் போன்ற மூல நூல்களை படிக்கவேண்டும். இஸ்லாமியர்கள் எழுதிய நூல்களையும், இஸ்லாமியரல்லாதவர்கள் எழுதிய இஸ்லாம் பற்றிய நூல்களையும் படிக்கவேண்டும். அப்போது தான் முழு இஸ்லாம் பற்றி அறிய முடியும்.

**போதகர்:** ஓ.. அப்படியா. இன்றே நான் ஒரு குர்-ஆனையும், ஹதீஸ்களையும், ஹசரத் முஹம்மதுவின் வாழ்க்கை வரலாறையும் வாங்கி படிக்க ஆரம்பிக்கிறேன். ஆனால், முதலில் நான் எதனை படிப்பது? குர்-ஆனை முதலாவது படிக்கவேண்டாம் என்றுச் சொல்கிறீர்கள். அப்படியானால், நான் ஹதீஸ்களை முதலாவது

படிக்கட்டுமா?

**உமர்:** நான் உங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறேன். புதிய ஏற்பாட்டிலிருக்கும் ''அப்போஸ்தலர் நடபடிகள்'' புத்தகத்தையோ, அல்லது நம்முடைய நான்கு சுவிசேஷங்கள் அல்லாத இதர புத்தகங்களையோ முதன் முதலாக ஒரு நபர் படித்தால், கிறிஸ்தவம் பற்றி, இயேசு கிறிஸ்து பற்றி எவ்வளவு விவரங்களை அறிந்துக் கொள்வார்?

**போதகர்:** புதிய ஏற்பாட்டிலிலுள்ள சுவிசேஷங்களை முதலாவது படிக்காமல், இயேசுப் பற்றியும், அவரது செய்திகளைப் பற்றியும் படிக்காமல் ஒரு புதிய நபர், இதர புத்தகங்களை படிப்பாரானால், அவரால் கிறிஸ்தவத்தை முழுவதுமாக அறிந்து கொள்ளமாட்டார், அதற்கு பதிலாக அதிகமாக குழம்பிப் போவார். ஏனென்றால், சுவிசேஷங்கள் இதர புத்தகங்களை படிப்பதற்கு, புரிந்து கொள்வதற்கு அஸ்திபாரங்களாக இருக்கின்றன. இதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆகையால், என்னை கேட்டால், முதலாவது ஒரு சுவிசேஷத்தையாவது படிக்கணும் பிறகு அப்போஸ்தலர் நடபடிகளை படிக்கணும், பிறகு தான் இதர நிருபங்களை, புத்தகங்களை படிக்கணும், அப்போது தான் கோர்வையாக எல்லாம் புரியும்.

**உமர்:** ரொம்ப சரியாகச் சொன்னீங்க. இயேசுவை முதலாவது அறிந்துக் கொள்ளாமல், இயேசுவின் வாழ்க்கை, அவரது வார்த்தைகளை அறிந்து கொள்ளாமல் கிறிஸ்தவத்தை அறிந்துக்கொள்ள முயற்சி எடுப்பது, சரியானது அல்ல.

**போதகர்:** அதனால் தான் நாம் மற்றவர்களுக்கு நற்செய்தியை கூறும் போது சுவிசேஷ நூல்களை முதலாவது படிக்கக் கொடுக்கிறோம்.

**உமர்:** இதே போலத் தான், இஸ்லாம் பற்றி அறிய நாம் முதலாவது ''ஹசரத் முஹம்மதுவை'' அறிய வேண்டும். ஹசரத் முஹம்மது தான் இஸ்லாம், முஹம்மதுவின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள் தான் இஸ்லாமுக்கு அஸ்திபாரம். ஹசரத் முஹம்மதுவின் வாழ்க்கை குர்-ஆனின் விரிவுரையாக உள்ளது.

1.முஹம்மது எங்கே பிறந்தார்?
2.எப்படி வளர்ந்தார்?
3.அவர் இஸ்லாமிய தீர்க்கதரிசி என்று தன்னை பிரகடனப்படுத்திக் கொண்ட காலத்திற்கு முன்பு எப்படி வாழ்ந்தார்?
4,தான் ஓர் நபி (தீர்க்கதரிசி) என்று சொல்லிக்கொண்ட பிறகு அவரது வாழ்க்கை எப்படி இருந்தது?
5.அவரது இஸ்லாமிய பிரச்சாரம் எப்படி இருந்தது?
6.அவருடைய அன்றைய இஸ்லாமிய பிரச்சாரத்திற்கு எதிரிகளாக இருந்தவர்கள் என்ன செய்தார்கள்?
7.அவர்கள் மூலமாக முஹம்மது சந்தித்த சவால்கள், பிரச்சனைகள் என்னென்ன?
8. ஹசரத் முஹம்மது ஏன் மக்காவை விட்டு மதினாவிற்கு இடம் பெயர்ந்தார்?
9.நான் தான் இஸ்லாமிய நபி என்று அவர் சொல்லிக் கொண்ட பிறகு கூட, ஏன் அனேக ஆண்டுகள் இஸ்லாமியர்கள் எருசலேமை நோக்கி நமாஜ் செய்தார்கள்?
10.பின்பு எந்த கால கட்டத்தில் இஸ்லாமியர்கள் தொழுகை நடத்தும் திசை (கிப்லா) , எருசலேமிலிருந்து மக்காவிற்கு மாறியது?
11.மதினாவில் அவரது ஆரம்பகால வாழ்க்கை எப்படி இருந்தது?
12. ஹசரத் முஹம்மது எப்படி யுத்தங்கள் செய்தார்?
13.அவர் யுத்தங்கள் செய்வதற்கான காரணங்கள் என்னென்ன?
14. அவருக்கும் யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட உரையாடல்கள் என்னென்ன?
15. ஆரம்ப காலத்தில் யூதர்கள், கிறிஸ்தவர்கள் பற்றி அவர் கூறியவைகள் யாவை?
16. கடைசி காலத்தில் இவர்களைப் பற்றிய அவரது நோக்கம் எப்படி மாறியது?
17. அவரது கடைசி காலம் எப்படி இருந்தது?
18. அவர் எப்போது மரித்தார் - எப்படி மரித்தார்?

போன்ற இந்த கேள்விகளுக்கான விடைகளை நாம் தெரிந்துக்கொண்டு அதன் பிறகு குர்-ஆனையும், ஹதீஸ்களையும் படிக்கும் போது, நமக்கு இஸ்லாம் பற்றிய அறிவு சரியான முறையில் கிடைக்கும், மற்றும் குழப்பம் நீங்கும். முஹம்மதுவின் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளுக்கும், குர்-ஆனின் வசனங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எனவே, குர்-ஆனை அறிவதற்கு முன்பு, நாம் முஹம்மதுவை அறிய வேண்டும்.

ஆகையால், முதலாவது முஹம்மதுவை அறிந்துக்கொள்ளுங்கள், இரண்டாவதாக, குர்-ஆனையும் ஹதீஸ்களையும், இதர இஸ்லாமிய விரிவுரைகளையும், மற்றும் இஸ்லாமியர்கள் எழுதும் புத்தகங்களையும் படியுங்கள். அப்போது தான் சரியான முறைப்படி நாம் இஸ்லாமை அறிய முடியும். ஹதீஸ்களிலும் விவரங்கள் ஒரு கோர்வையாக சொல்லப்படவில்லை எனபது குறிப்பிடத்தக்கது. எனவே, முதலாவது முஹம்மதுவின் வாழ்க்கைச் சரிதையை படிக்கவேண்டும்.

**போதகர்:** கிறிஸ்தவத்தின் மூலைக்கல் இயேசு, அது போல இஸ்லாமின் மூலைக்கல் ஹசரத் முஹம்மது.

எனவே, இவ்விரு மார்க்கங்களை கற்க முதலாவது அதன் ஸ்தாபகர்களைத் தெரிந்துக்கொள்ள வேண்டும். இப்போது எனக்கு புரியுது.

**உமர்:** இப்போது சரியாக நீங்க புரிஞ்சுக்கிட்டீங்க.

**போதகர்:** நான் இப்போது ஒரு தனிப்பட்ட கேள்வியை கேட்பேன், கோபித்துக் கொள்ளமாட்டீங்களே!

**உமர்:** தாராளமாகக் கேளுங்க, இதுல கோபித்துக் கொள்வதற்கு ஒன்றுமே இல்லை.

**போதகர்:** நீங்க கடந்த சில ஆண்டுகளாக, இஸ்லாம் பற்றிய கட்டுரைகளை தமிழில் எழுதுவதாகவும், இதர கிறிஸ்தவர்களின் உதவியோடு ஆங்கில கட்டுரைகளை மொழிப்பெயர்த்து தமிழில் பதிப்பதாகவும் கேள்விப்பட்டேன். மட்டுமல்ல, ஆன்சரிங் இஸ்லாம் தளத்தில் தமிழில் ஒரு பிரிவு இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். இப்போது என் கேள்வி என்னவென்றால், இஸ்லாம் பற்றி அறிய முதலாவது முஹம்மதுவின் வாழ்க்கை வரலாறு, பிறகு குர்-ஆன், ஹதீஸ்கள், குர்-ஆன் விரிவுரைகள், மற்ற இஸ்லாமியர்களின் புத்தகங்களை படித்தால் போதும் என்றுச் சொன்னீங்க. அப்படியானால், நீங்கள் எழுதும் கட்டுரைகளை படிப்பதினால், இஸ்லாமைப் பற்றி வேறு எவைகளை நாம் அறிந்துக்கொள்ள முடியும். இஸ்லாமிய மூல நூல்களே நமக்கு இஸ்லாம் பற்றிச் சொல்லித் தரும் போது, நாங்கள் ஏன் உங்கள் கட்டுரைகளை படிக்கவேண்டும்?

**உமர்:** சரியான கேள்வியைத் தான் கேட்டு இருக்கீங்க. நான் ஏற்கனவே சொன்னது போல, இஸ்லாம் என்னும் ரூபாய் நோட்டுக்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. ஒரு பக்கத்தை அறிய இஸ்லாமியர்கள் எழுதும் நூல்கள் நமக்கு உதவும். இஸ்லாமில் உள்ள நல்ல விஷயங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் இஸ்லாமியர்கள் எழுதுவார்கள். எங்க மார்க்கம் இப்படி, எங்க மார்க்கம் அப்படி, எங்க நபி இப்படிப்பட்டவர், அப்படிப்பட்டவர் என்று சொல்லுவாங்க, மற்றும் எழுதுவாங்க. ஆனால், இஸ்லாமின் கொடூர முகத்தை அவர்கள் மறைத்துவிடுவார்கள். முஹம்மதுவின் வாழ்க்கையில் நடந்த சமூகத்திற்கு கேடு விளைவிக்கும் சில கீழ்தரமான நிகழ்ச்சிகள் பற்றி நம்மிடம் சொல்லவே மாட்டார்கள். அப்படி யாராவது கேட்டுவிட்டாலும், அதற்கு சப்பை கட்டு கட்டி, நம்மை குழப்பி அவைகளை மறுத்துவிடுவார்கள்.

எனவே, முதலாவதாக, எங்களுடைய அல்லது இஸ்லாமியரல்லாதவர்களுடைய கட்டுரைகள், ''இஸ்லாமில் இருக்கும் கேள்விகள் கேட்கப்படவேண்டிய விவரங்கள்'' பற்றிய அறிவைத் தருகின்றன. எனவே, இஸ்லாமிய நாணயத்தின் மறுபக்கத்தை அறிய நம்முடைய கட்டுரைகள் உதவும்.

உதாரணத்திற்கு:

முஹம்மதுவின் இராணுவ பலம் அதிகரித்த போது, மற்ற நாட்டு மன்னர்களுக்கு ''இஸ்லாமை தழுவும் படி ஹசரத் முஹம்மது கடிதங்கள்'' எழுதினார். அதாவது, ''இஸ்லாமை ஏற்கிறாயா அல்லது என் இராணுவத்தால் மடிந்து சாகிறாயா'' என்று கேட்டு, பயப்படவைத்து இஸ்லாமுக்கு அழைத்தார்.

இந்த விவரங்களை நம்முடைய இஸ்லாமிய நண்பர்கள் அறிஞர்கள் நம்மிடம் கூற மாட்டார்கள், அப்படி கூறினாலும், உண்மையை மறைத்து பொய்யைச் சொல்வார்கள். இவைகளை மக்கள் அறியும்படி வெளியே கொண்டு வருவது தான் எங்கள் நோக்கம்.

இன்னொரு உதாரணத்தைச் சொல்லட்டும்: திரு.பி.ஜெய்னுல் ஆபிதீன் என்ற இஸ்லாமிய அறிஞர் *இயேசு இறைமகனா* என்ற ஒரு புத்தகத்தை எழுதினார். அதில் தனக்கு வந்த பாணியில் பைபிள் மீதும், இயேசு கிறிஸ்து மீதும் பொய்களை அள்ளி வீசினார். இவைகளை படிக்கும் கிறிஸ்தவர்கள் குழம்பிவிடுகின்றனர். எனவே, நாங்கள் அவருக்கு பைபிளின் துணைக்கொண்டு பதில்கள் மறுப்புக்கள் எழுதுகிறோம். அவர் மட்டும் எங்கள் கட்டுரைக்கு பதில் சொல்லாமல் இருக்கிறார்.

இப்படி இஸ்லாமியர்கள் இஸ்லாம் பற்றி, ஹசரத் முஹம்மது பற்றி வெளியே சொல்ல வெட்கப்படும் விவரங்களை நாம் மக்களின் முன் வைக்கிறோம். கிறிஸ்தவம் மீது சுமத்தும் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புக்களை கொடுக்கிறோம். சராசரி கிறிஸ்தவர்களிடம், அதிகம் அறியாதவர்களிடம் கேள்விகள் கேட்டு அவர்களை குழப்பும் இஸ்லாமியர்களுக்கு பதில்கள் மறுப்புகள் எழுதுகிறோம். இதனால் கிறிஸ்தவர்கள் இஸ்லாம் பற்றியும் அறிந்துக்கொள்வார்கள், அதே நேரத்தில் கிறிஸ்தவம் பற்றியும் அதிகமாக அறிந்து கொள்வார்கள்.

ஆக, எங்கள் கட்டுரைகள் இஸ்லாமின் இன்னொரு முகத்தை உலகிற்கு எடுத்துக்காட்டும். அப்போது தான் உண்மை இஸ்லாமை உங்களைப் போன்ற கிறிஸ்தவ போதகர்கள், விசுவாசிகள் அறிந்து கொள்ள முடியும். எவனை விழுங்கலாம் என்று பிசாசானவன் வகை தேடி சுற்றித் திரிகிறான். அவனுடைய வலையில் கிறிஸ்தவர்கள் விழக்கூடாது என்ற எண்ணத்தில் இதனை செய்கிறோம்.

எங்கள் கட்டுரைகள் மூலமாக உங்கள் நேரம் கூட மிச்சமாகும் .

**போதகர்:** இப்போது எனக்கு நன்றாக புரிகிறது. ஆனால், எங்கள் நேரம் மிச்சமாகும் என்று சொல்கிறீர்களே, அது எப்படி?

**உமர்:** உங்கள் நேரம் எப்படி மிச்சமாகும் என்பதை இப்போது நான் விளக்குகிறேன். உங்க சபையில் இருக்கும் ஒரு விசுவாசிக்கு யாரோ இஸ்லாம் பற்றி கூறியதாகவும், அவர் கேட்கும் கேள்விகளுக்கு பதில்கள் தேவை என்பதாலும் தான் நீங்கள் இப்போது என்னோடு உரையாடிக்கொண்டு இருக்கீங்க இல்லையா?

**போதகர்:** ஆமாம்.

**உமர்:** எங்களைப்போல இஸ்லாம் பற்றி ஏற்கனவே அறிந்தவர்களிடம் வராமல், நீங்களாகவே இஸ்லாம் பற்றி ஆராய ஆரம்பித்தால், நீங்கள் அனேக புத்தகங்களை படிக்கனும், நூற்றுக்கணக்கான மணி நேரங்களை செலவிடனும், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் பற்றிய புத்தகங்கள் எங்கே கிடைக்கும் என்று தேடி அலையனும். குர்-ஆனையும், விரிவுரைகளையும், முஹம்மதுவின் வாழ்க்கை வரலாறையும் படித்து புரிந்துக்கொள்ளனும், இதற்கு பல ஆண்டுகள் ஆகும். இதற்கு இடையில் உங்கள் சொந்த வேலைகளையும் பார்க்கனும், சபையை கவனித்துக் கொள்ளனும்.

இன்னும் சொல்லவேண்டுமென்றால், அனேக இஸ்லாமிய நூல்கள் இன்னும் தமிழில் மொழிப்பெயர்க்கப் படவில்லை. அவைகளில் சில நூல்கள் ஆங்கிலத்தில் கிடைக்கின்றன, சில நூல்கள் இன்னும் அரபி மொழியிலேயே உள்ளது. இந்த நூல்கள் எங்கே கிடைக்கும் என்று நீங்கள் தேடனும். அரபி மொழி தெரியாமல் திகைக்கனும்.

இஸ்லாம் ஒரு கடல் போன்றது, அதில் இஸ்லாமிய அறிஞர்கள் மிகப்பெரிய திமிங்கிலங்கள் போல உலா வருகிறார்கள். ஏதாவது ஒரு சின்ன மீன் கிடைத்தால், உடனே அதனை விழுங்கிவிடுவார்கள்.

உங்கள் விசுவாசி கேட்கும் நான்கு கேள்விகளுக்கு பதிலை நீங்கள் தேடி கண்டுபிடித்து அவருக்கு சொல்வதற்கு உங்களுக்கு நான்கு ஆண்டுகளாகும்.

ஆனால், இஸ்லாமிய பின்னணியிலிருந்து வந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட எங்களைப் போன்றவர்கள் பல ஆண்டுகளாக இஸ்லாமை கற்றுக்கொண்டு இருக்கிறோம், இன்றும் கூட ஒவ்வொரு நாளும் இஸ்லாமை தொடர்ந்து படித்துக்கொண்டு இருக்கிறோம். பல இஸ்லாமிய நூல்களை படிக்கிறோம், ஆங்கிலத்திலும் படிக்கிறோம். அரபியிலும் படிக்கிறோம் அல்லது அரபி தெரிந்த கிறிஸ்தவர்களிடம் கேட்டு தெரிந்துக்கொள்கிறோம். உலகத்தில் நடக்கின்ற "இஸ்லாம் - கிறிஸ்தவ" விவாதங்களை பார்க்கிறோம், படிக்கிறோம். இஸ்லாமியர்கள் அதிகமாக வாழும் நாடுகளாகிய பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் அனேக ஆண்டுகள் ஊழியம் செய்து அதன் மூலம் பெற்ற அறிவை புத்தகங்களாக நம்முடைய கரங்களில் கொடுத்துச் சென்ற அனேக கிறிஸ்தவ போதகர்கள், மிஷனரிகள் வாழ்க்கையை படிக்கிறோம். அவர்கள் சந்தித்த இஸ்லாமிய சவால்களை அறிந்துக்கொள்கிறோம்.

ஆகவே, ஆயிரக்கணக்கான மணி நேரங்கள் இனி நீங்கள் செலவிடவேண்டாம், அவைகளை நாங்கள் ஏற்கனவே செலவிட்டுவிட்டோம். ஆகையால், நாங்கள் கற்றுகொண்ட விவரங்களை உங்களுக்கு சொல்லிவிட்டால் போதும், உங்களின் பல ஆண்டுகள் மிச்சமாகும். ஒவ்வொரு நாளும் சில மணி நேரங்கள் ஒதுக்கி ஒரு மாதம் ஆராய்ச்சி செய்து கற்றுக்கொள்ள வேண்டிய இஸ்லாம் பற்றிய விவரங்களை, எங்கள் ஓரிரு கட்டுரைகளை படித்தால் நீங்கள் அறிந்துக்கொள்ளலாம். ஆகையால், உங்கள் நேரம் அதிகமாக மிச்சமாகும். மற்றும் மூல ஆதாரங்களை நாங்கள் தருவதினால், எங்கள் விவரங்களில் உள்ள நம்பகத்தன்மைய நீங்களே சரி பார்த்துக்கொள்ளலாம். நாங்கள் பதில்கள் எழுதும் போது, குர்-ஆனில் இந்த அதிகாரம், இந்த வசனம் என்று எண்கள் குறிப்பிட்டு எழுதுகிறோம், ஹதீஸ்களின் எண்களை தருகிறோம், குர்-ஆன் விரிவுரையாளர்களின் இணைய தள தொடுப்புக்களைத் தருகிறோம். இப்படி ஆதாரங்களை தருவதினால், நீங்கள் அவைகளை சரி பார்த்து தெரிந்துக்கொள்ள வாய்ப்பு உண்டாகும்.

**போதகர்:** நீங்க சொல்வது உண்மை தான். இஸ்லாம் பற்றி அறிந்துக்கொள்ள மணிக்கணக்கில் என்னால் நூலகத்தில் உட்கார்ந்து படிக்கமுடியாது. என் சபையில் இருக்கிற 500க்கும் அதிகமான விசுவாசிகளின் தேவைகளை சந்திப்பதற்கும், இன்னும் கிளைச் சபைகளை கவனித்துக கொள்வதற்குமே எனக்கு நேரம் போதவில்லை. இப்படி இருக்கும் போது, எப்படி நான் இஸ்லாமை முழுவதுமாக அறிய முடியும்?

**உமர்:** ஆகையால் தான் சொல்கிறேன், ஒரு கோர்வையாக மற்றும் முக்கியமான விவரங்களை மட்டும் நீங்கள் அறிந்துக்கொண்டால் போதும். உங்க சபையில் உள்ள ஆர்வமுள்ள 10 விசுவாசிகளுக்கு மட்டும் இஸ்லாம் பற்றி கற்றுக்கொடுத்தால் போதும், அவர்கள் உங்கள் முழு சபைக்குமே உதவியாக இருப்பார்கள். உங்களுக்கு விருப்பமிருந்தால் சொல்லுங்க, நாங்கள் மாதாமாதம் நடத்தும் "இஸ்லாமை அறிவோம்" வகுப்புகளில் உங்கள் விசிவாசிகளுக்கும் பயிற்சி அளிக்கிறோம், கற்றுக்கொடுக்கிறோம். பிறகு அவர்கள் உங்கள் சபையின் தேவையை பூர்த்தி செய்வார்கள்.

**போதகர்:** ஓஹோ.. இது நல்ல ஆலோசனையாக இருக்கிறதே... நிச்சயமாக நான் எங்கள் சபை விசுவாசிகளுக்கு இதைப் பற்றிச் சொல்லி உங்கள் வகுப்புகளுக்கு அனுப்புகிறேன். இன்னும் முக்கியமாக, நீங்க ஒரு முறை எங்க சபைக்கு வரணும், ஒரு மணி நேரம் உங்களிடம் எங்க விசுவாசிகள் தங்கள் சந்தேகங்களை கேட்பாங்க. அப்போ நீங்க ஒரு முன்னுரையை கொடுத்தால் போதும். மிகவும் உதவியாக இருக்கும்.

**உமர்:** கண்டிப்பாக நாங்க வருகிறோம். என்னோடு கூட இன்னும் அனேக கிறிஸ்தவ போதகர்கள், நண்பர்கள் இருக்கிறார்கள். நாங்க குழுவாக வருவோம்.

**போதகர்:** உங்களிடம் பேசியதிலே ரொம்ப மகிழ்ச்சி. இப்போது தான் இஸ்லாம் பற்றிய ஒரு மிகப்பெரிய வரைபடம் கிடைச்சுது. இனி தான் என் தனிப்பட்ட பயணத்தை நான் தொடரனும். எனக்கும் தனிப்பட்ட விதத்தில் இஸ்லாம் பற்றி அறியணும் என்ற ஆர்வம் வந்திருக்கு. உங்களை நான் அடுத்த வாரம் சந்திக்கிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. நாம் விடைபெறுவதற்கு முன்பு ஒரு சின்ன ஜெபத்தை செய்வோமா?

**உமர்:** கண்டிப்பாகச் செய்வோம்.

(இருவரும் சில நிமிடங்கள் ஜெபித்து விட்டு, விடைப்பெற்றுக்கொண்டு சென்றார்கள்.)

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

## காட்சி- 2

இப்போது கிறிஸ்தவப் போதகர் தன் சபையில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு படுத்தி, தன் சபை விசுவாசிகளுடன் உமர் மற்றும் அவருடைய நண்பன் ஜான்சன் அவர்களை அறிமுகப்படுத்தியுள்ளார். இனி அந்த சபையின் விசுவாசிகள் கேட்கும் கேள்விகளுக்கு பதில்களை இந்த கட்டுரையில் காண்போம். அந்த போதகர் அறிமுக உரையை முடித்துவிட்டு, நேரடியாக கேள்வி பதில்களுக்கு மீதமுள்ள நேரத்தை கொடுத்துவிட்டார்.

### புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில்
### ஹசரத் முஹம்மதுவின் நபித்துவத்தைப் பற்றிய சிறு குறிப்பு

**உமர்:** கர்த்தருக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு, இயேசுவின் நாமத்தில் எங்கள் வாழ்த்துதல்களை தெரிவித்துக்கொள்கிறோம். என்னோடு சகோதரர் ஜான்சன் அவர்கள் வந்துள்ளார்கள், அவரும் உங்கள் கேள்விகளுக்கு பதில் அளிப்பார். உங்கள் போதகர் ஏற்கனவே அறிவித்தபடி, இன்று நாம் முஹம்மது மற்றும் அவரது நபித்துவம் பற்றிய கேள்விகளுக்கு பதில்களைக் காண்போம். கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த கூட்டத்தில் நாம் இதர தலைப்புகளில் பேசுவோம்.

இப்போது நாம் நேரடியாக முதல் கேள்விக்குச் செல்வோம். உங்களில் யார் முதல் கேள்வியை கேட்கப்போகிறீர்கள்?

((முதல் கேள்வியை கேட்பதற்கு, ஒரு கரம் மேலே எழும்புகிறது, முதல் கேள்வி கேட்கப்படுகின்றது. இக்கட்டுரையில் குறிப்பிடப்படும் பெயர்கள் அனைத்தும் புனைப்பெயர்களாகும். )

**கேள்வி 1:** என் பெயர் ஜெபராஜ். நான் ஒரு கிளைச் சபையின் போதகராக இருக்கிறேன். என் கேள்வி என்னவென்றால், கிறிஸ்தவர்களாகிய நாம் இஸ்லாமியர்களுக்காக ஜெபித்தால் மட்டும் போதாதா? அவர்களுக்கு சுவிசேஷத்தை அதாவது நற்செய்தியை கூறினால் போதாதா? ஏன் நாம் அவர்கள் வேதமாகிய குர்-ஆனை படிக்கவேண்டும் மற்றும் இதர இஸ்லாமிய நூல்களை படித்து இஸ்லாம் பற்றி தெரிந்துக்கொள்ள வேண்டும்? **இஸ்லாமை கற்க நாம் ஏன் நம்முடைய நேரத்தை வீணாக்க வேண்டும்?**

**உமர்:** முதலாவது சில கேள்விகளுக்கு நம்முடைய சகோதரர் பதில் அளிப்பார்கள், ஏனென்றால், அவர் அனேக இஸ்லாமியர்களோடு நேரடியாக உரையாடியுள்ளார், அவருக்கு இந்த விஷயத்தில் அதிக அனுபவம் உண்டு. சகோதரர் ஜான்சன் வாங்க!.
(சகோ. ஜான்சன் பதில் அளிக்கிறார்)

**சகோ.ஜான்சன்:** கர்த்தருடைய நாமத்தில் உங்கள் அனைவர் மீதும் சமாதானம் உண்டாவதாக.
நீங்கள் ஒரு அடிப்படையான கேள்வியைத் தான் கேட்டு இருக்கிறீர்கள். எப்போதெல்லாம் நாங்கள் இஸ்லாம் பற்றி ஓரளவாவது கற்றுக்கொள்ளுங்கள் என்று போதகர்களுக்கு சொல்லுகிறோமோ! அப்போதெல்லாம் இந்த கேள்வி எழுப்பப்படுகிறது.

கிறிஸ்தவ போதகர்கள் ஒன்றை சரியாக புரிந்துக்கொள்ளவேண்டும். நாம் இஸ்லாமியர்களுக்கு சுவிசேஷம் சொல்வதற்கும், இஸ்லாமிய ரல்லாதவர்களுக்கு சுவிசேஷம் சொல்வதற்கும் வித்தியாசம் உண்டு. அதாவது, நீங்கள் இஸ்லாமியர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும் போது, அவர்கள் எதிர் கேள்விகளை கேட்பார்கள். அவர்களோடு தொடர்ந்து உரையாட வேண்டுமென்றால், அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்ல தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

இமாம்கள் மற்றும் இஸ்லாமிய அறிஞர்களால் இஸ்லாமியர்கள் மூளைச் சலவை செய்யப்பட்டுள்ளார்கள். பைபிளுக்கு எதிரான அனேக கருத்துக்களை இஸ்லாமியர்கள் நம்புகிறார்கள். இது மட்டுமல்லாமல், பைபிளின் அடிப்படை கோட்பாடுகளை குர்-ஆன் மறுக்கிறது. உதாரணத்திற்கு கீழ்கண்டவைகளைச் சொல்லலாம்:

1) இஸ்லாமின் படி, இயேசு மற்ற தீர்க்கதரிசிகளைப் போல ஒரு தீர்க்கதரிசி ஆவார். அவர் தேவகுமாரனல்ல.

2) இஸ்லாமின் படி, இயேசு பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கும் இரட்சகர் அல்ல (அ) அவர் நம்முடைய பாவங்களுக்காக மரிக்கவில்லை, உயிர்த்தெழவில்லை.

3) இஸ்லாமின் படி, இயேசுவிற்கு அடுத்தபடியாக, தேவன் ஹசரத் முஹம்மதுவை அனுப்பினார், எனவே, முந்தைய தீர்க்கதரிசிகள் சொன்ன போதனைகளின் படி வாழும் மக்கள் (யூதர்கள், கிறிஸ்தவர்கள் ), இப்போது அந்த வரிசையில் வந்த ஹசரத் முஹம்மதுவை நம்பவேண்டும். அவரை தம்முடைய வழிகாட்டியாக பாவித்து வாழவேண்டும், வேறு வகையில் சொல்லவேண்டுமென்றால் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் இஸ்லாமியர்களாக மாறிவிடவேண்டும்.

இஸ்லாமியர்களின் சிறுவயது முதற்கொண்டு அவர்களுக்கு மேற்கண்ட விதமான போதனைகள் போதிக்கப்படுவதினால், அவர்களுக்கு நற்செய்தியை சொல்லும் போது, அவர்கள் ஒரு சில கேள்விகளையாவது கேட்பார்கள். ஆகையால், குறைந்தபட்சமாக, போதகர்கள் இஸ்லாம் பற்றிய அடிப்படை அறிவைப் பெறவேண்டும், இஸ்லாமுக்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையே இருக்கும் ஒற்றுமைகள் எவைகள், வேற்றுமைகள் எவைகள் என்பதை அறியவேண்டும்.

ஆகையால், முதலாவது இஸ்லாமியர்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டும், அதன் பிறகு அவர்களின்

கேள்விகளுக்கு பதில்களைச் சொல்ல நம்மை தயார் படுத்திக்கொள்ளவேண்டும். இயேசுவின் நற்செய்தி இஸ்லாமியர்களை சென்றடைய அனேக தடைகள் உள்ளன, அவைகளில் ஒரு தடை, ''இயேசு பற்றியும், பைபிள் பற்றியும்'' அவர்களுக்கு போதிக்கப்பட்டுள்ள தவறான விவரங்களாகும். ஆகவே, அவர்கள் தவறாக புரிந்துவைத்துக்கொண்டுள்ள விவரங்களுக்கு நாம் பதில்களைக் கொடுத்தால், அவர்களின் சந்தேகங்களை நாம் தீர்த்துவைத்தால் தான் சுவிசேஷம் அவர்களை சென்றடையும், அவர்களும் தேவனுடைய இராஜ்ஜியத்தின் மக்களாக மாறுவார்கள்.

இஸ்லாமை கற்க போதகர்களாகிய நீங்கள் செலவிடும் நேரம் வீணான நேரமல்ல, அது தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக செலவிடப்படும் சிறந்த முதலீடு ஆகும். எனவே, உங்கள் ஜெப அறையில் அந்தரங்கத்தில் அவர்களுக்காக ஜெபியுங்கள், அதே நேரத்தில் வெளியரங்கமாக அவர்களின் சந்தேகங்களை தீர்த்துவைத்து, நற்செய்தியை கூறுங்கள்.

அடுத்த கேள்விக்கு போவோம்.

**கேள்வி 2:** என் பெயர் தாமஸ். நான் கேட்கவிரும்பும் கேள்வி என்னவென்றால், ''என்னுடைய முஸ்லிம் நண்பர் ''ஹசரத் முஹம்மது கடைசி தீர்க்கதரிசி'' எனவே, கிறிஸ்தவர்களாகிய நீங்கள் அவரை நபி (தீர்க்கதரிசி) என்று ஏற்கவேண்டும் மற்றும் அவரை பின்பற்ற வேண்டும்'' என்று கூறுகிறார். ஹசரத் **முஹம்மது கடைசி தீர்க்கதரிசியா?** ஹசரத் **முஹம்மது பற்றிய பைபிளின் கருத்து என்ன?**

**சகோ.ஜான்சன் - பதில் 2:** இது மிகவும் முக்கியமான கேள்வி, அதே நேரத்தில் பைபிளை படிக்கும் ஒரு நபர் சுலபமாக பதில் தரக்கூடிய கேள்வியும் இதுவே. குறைந்தபட்சம் புதிய ஏற்பாட்டை தொடர்ந்து படிக்கும் ஒரு நபர் இந்த கேள்விக்கு சுலபமாக பதில் அளித்துவிடமுடியும். இக்கேள்விக்கான பதிலை நான் விவரிக்கும் போது, பைபிளிலிருந்து சில கேள்விகளை உங்களிடம் கேட்பேன், அதற்கு உங்களில் சிலர் பதில் கூறலாம். நீங்கள் கூறும் பதிலே இந்த கேள்விக்கான பதிலாக அமையும்.

இயேசுவிற்கு பிறகு இன்னொரு தீர்க்கதரிசி வந்தாரா?

1) என் முதல் கேள்வி என்னவென்றால், ''புதிய ஏற்பாட்டில்'' இயேசு எங்கேயாவது தனக்கு பின்பாக ஒரு ''தீர்க்கதரிசி'' வருவார் அவரை நீங்கள் (கிறிஸ்தவர்கள்) பின்பற்றவேண்டும் என்று கூறியுள்ளாரா?

**கூட்டத்திலிருந்து ஒருவர் எழுந்து நின்று:** இயேசு ஒரு தீர்க்கதரிசி வருவார் என்று கூறவில்லை, ஆனால், தனக்கு பின்பு ''ஒரு தேற்றரவாளனை'' அனுப்புவதாக கூறியுள்ளார் என்று பதில் அளித்தார்.

**சகோ.ஜான்சன் :** சரியாகச் சொன்னீர்கள், இப்போது அடுத்த கேள்வி: ''அந்த தேற்றரவாளன்'' வருவதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று இயேசு கூறினார்? 100 ஆண்டுகள் 200 ஆண்டுகள் அல்லது 600 ஆண்டுகள் என்று இயேசு கூறினாரா?

**கூட்டத்திலிருந்து ஒருவர் பதில் கூறுகிறார்:** இயேசு எத்தனை ஆண்டுகள் காத்திருக்கவேண்டும் என்றுச் சொல்லவில்லை, ஆனால், தம்முடைய சீடர்கள், அந்த தேற்றரவாளன் வரும்வரை எருசலேமில் காத்திருக்கும் படி கூறினார், அதன் பின்பு தான் "நீங்கள் எனக்கு சாட்சிகளாக ஊழியம் செய்யலாம்'' என்று இயேசு கூறியுள்ளார்.

**சகோ. ஜான்சன்:** ஆக, தம்முடைய சீடர்கள் உயிரோடு இருக்கும் போதே அந்த தேற்றரவாளன் வருவார் என்பது தெளிவு. அடுத்த கேள்வி: இயேசு கூறியபடி அந்த தேற்றரவாளன் வந்தாரா? இல்லையா?

**கூட்டத்திலிருந்து ஒருவர் எழுந்து நின்று பதில் கூறுகிறார்:** இயேசு உயிர்த்தெழுந்து சீடர்களுக்கு பல சந்தரப்பங்களில் தன்னை உயிரோடு இருப்பவராக காண்பித்து, 40 நாட்கள் அவர்களோடு சம்பாஷித்தார், அதன் பிறகு பரமேறிச் சென்றார், பரிசுத்த ஆவியாவர் வரும்வரை எருசலேமில் காத்திருங்கள் என்றார். அதே போல, சீடர்கள் காத்திருந்தார்கள், 10 நாட்கள் கழித்து பரிசுத்த ஆவியானவர் வந்தார். அதன் பின்பு சீடர்கள் ஊழியம் செய்தார்கள். இதனை நாம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் காணலாம்.

**சகோதரர் ஜான்சன்:** ஆக, இயேசு தனக்கு பின்பு ''ஒரு தீர்க்கதரிசி'' வருவார் என்று சொல்லவில்லை, மற்றும் அவர் வருவார் என்றுச் சொன்னவர் ''பரிசுத்த ஆவியானவரைத் தான்''. பரிசுத்த ஆவியானவரும் சில நாட்களுக்குள்ளேயே வந்தார். இப்படி இருக்கும் போது ''தேற்றரவாளன்'' என்று இயேசு குறிப்பிட்டது ''ஹசரத் முஹம்மதுவைத் தான்'' என்று இஸ்லாமியர்கள் சொல்வது எல்லாம் சுத்தப் பொய்யாகும். நம்முடைய வேதத்தில் உள்ள விவரங்களை திருத்திச் சொல்லி, நம்மையே வஞ்சிக்க இஸ்லாமிய அறிஞர்கள் முயற்சி எடுக்கிறார்கள் என்பதை புரிந்துக்கொள்ளுங்கள்.

**இரண்டாவதாக,** இன்னொரு கோணத்தில் ''முஹம்மது கடைசி நபியா?'' என்பதை புதிய ஏற்பாட்டிலிருந்து காண்போம்.

இயேசு இரட்சிப்பை (அ) தம் மார்க்கத்தை அரைகுறையாக விட்டுச் சென்றாரா? அல்லது முழுமைப்படுத்திச் சென்றாரா? அதாவது இயேசு ''இரட்சிப்பை'' முழுவதுமாக முடித்துச் சென்றாரா? அல்லது

“நான் பாதியை முடித்தேன், எனக்கு பின்பு ஒரு தீர்க்கதரிசி வருவார் அவர் மீதியை முடிப்பார்” என்று சொல்லிவிட்டுச் சென்றாரா?

புதிய ஏற்பாட்டை தன் தாய் மொழியில் அல்லது தனக்கு புரியும் மொழியில் படிக்கும் கிறிஸ்தவர் இதற்கு சுலபமாக பதிலைக் கூறுவார்.

நீங்கள் எல்லாரும் புதிய ஏற்பாட்டை படித்துக்கொண்டு இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். ஆகையால், இந்த கேள்விக்கு நீங்களே பதில் சொல்லுங்கள்.

**கூட்டத்திலிருந்து ஒருவர் எழுந்து நின்று** “இயேசு சிலுவையில் மரிக்கும் போது **முடிந்தது** என்றுச் சொல்லி மரித்தார், அதாவது தாம் எதற்காக வந்தாரோ அதை முடித்துவிட்டேன், எதையும் மீதி வைக்கவில்லை என்றுச் சொல்லி மரித்தார், ஆகையால் இயேசு இரட்சிப்பை முழுமைப்படுத்தியே சென்றார்” என்று கூறினார்.

**சகோ. ஜான்சன்:** சகோதரரே! சரியாகச் சொன்னீர்கள். இது ஒரு முக்கியமான விவரம். அடுத்த விவரத்தை யார் கூறப்போகிறீர்கள்?

**இன்னொரு சகோதரர் எழுந்து நின்று இப்படியாக கூறினார்:** “இயேசு நமக்காக மரித்தது மாத்திரமல்ல, மூன்றாம் நாளில் தாம் சொன்னதுபோலவே உயிர்த்தெழுந்தார். இதோடு நின்றுவிடாமல், தமக்கு அடுத்து “எப்படி ஊழியம் செய்யவேண்டும்?” போன்ற விவரங்களை தம்முடைய சீடர்களுக்கு கூறிவிட்டுச் சென்றார். அவர் பரமேறிச்சென்ற போது, தூதர்கள் “இயேசு எப்படி சென்றாரோ அதே போல வருவார்” என்றுச் சொல்லி “மறுபடியும் இயேசு வருவார்” என்பதை உறுதிப்படுத்தினார்கள், இன்னொரு தீர்க்கதரிசி முஹம்மது என்ற பெயரில் வருவார் அவருக்காக காத்திருங்கள் என்று தேவதூதர்கள் கூறவில்லை. ஆகையால், இயேசு தம்முடைய இரட்சிப்பை அரைகுறையாக விட்டுவிட்டுச் செல்லவில்லை, அதனை முழுமைப்படுத்திச் சென்றார்.”

**சகோ். ஜான்சன்**: இதுவும் ஒரு சரியான பதில் தான். மேலும் யாராவது எதையாவது கூறவிரும்புகிறீர்களா?

**ஒரு சகோதரி எழுந்து நின்று இப்படியாக கூறினார்:** “நாம் அப்போஸ்தலர் நடபடிகளை படித்தால், அதில் இயேசு தம் சீடர்கள் ஊழியம் செய்யும் போது எப்படி தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார், எவ்விதம் அற்புதங்கள் அடையாளங்கள் மூலமாக, தம்முடைய இரட்சிப்பை மக்களுக்கு வெளிப்படுத்தினார் என்பதை பார்க்கலாம்”. இயேசுவிற்கு பிறகு இன்னொரு தீர்க்கதரிசி வரவேண்டும் என்ற ஒரு கோட்பாடு அல்லது எதிர்பார்ப்பு வேண்டும் என்று பைபிள் எங்கும் கூறவில்லை. மிகவும் முக்கியமான விவரம் என்னவென்றால், புதிய ஏற்பாட்டின் கடைசி புத்தகமாகிய “வெளிப்படுத்தின விசேஷம்” எல்லாவற்றையும் முத்தரித்து விடுகின்றது. அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள், இன்னொரு தீர்க்கதரிசி வரவேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை என்று ஆணித்தரமாக கூறுகிறது. ஆக, இன்னொரு தீர்க்கதரிசி இல்லை. வரவேண்டிய அவசியமும் இல்லை. இயேசு இரட்சிப்பை முழுமைப்படுத்திச் சென்றார், மார்க்கத்தை முழுமைப்படுத்திச் சென்றார், இன்னொருவர் வந்து இடையில் நுழைவதற்கு எந்த ஒரு வாய்ப்பையும் பைபிள் அனுமதிக்கவில்லை, முக்கியமாக “வெளிப்படுத்தின விசேஷம்” என்ற நூல் அனுமதிப்பதில்லை.

**சகோ. ஜான்சன்:** நீங்கள் அனைவரும் கூறிய விவரங்கள் சரியான விவரங்களாகும். இதனை தொகுத்து நான் இப்போது சுருக்கமாக கூறுகிறேன்.

இயேசு தம் இரட்சிப்பை முழுமைப்படுத்திச் சென்றார், இஸ்லாமியர்களுக்கு புரியும் படி சொல்லவேண்டுமென்றால், “இயேசு தம் மார்க்கத்தை முழுமைப்படுத்திச் சென்றார்”, அதனை அரைகுறையாக விட்டுச் செல்லவில்லை. இதனை நாம் புதிய ஏற்பாட்டில், கீழ்கண்ட விவரங்களை படித்தால் புரிந்துக்கொள்ளலாம்.

1) இயேசுவின் சிலுவை மரணம்
2) அவரது உயிர்த்தெழுதல்
3) இயேசு உயிர்த்தெழுந்த பிறகு தமது சீடர்களுடன் அவர் பகிர்ந்து கொண்ட விவரங்கள்
4) தம் சீடர்கள் உலகமனைத்திற்கும் நற்செய்தி கூறுவதற்கு முன்பு, பரிசுத்த ஆவியானவருக் காக எருசலேமில் காத்திருக்கும் படி இயேசு கூறிய கட்டளை. இயேசு கூறியபடியே பெந்தெகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வருதல்
5) அதன் பிறகு, அப்போஸ்தலர்கள் தம் ஊழியத்தை செய்தல், சீடர்கள் மூலமாக இயேசு அற்புதங்கள் செய்து அந்த ஊழியத்தை ஆசீர்வதித்தல்.
6) கடைசியாக, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உலகத்தின் முடிவு, மற்றும் இயேசுவின் தெய்வீகத்தன்மை, கடைசி நியாயத்தீர்ப்பு போன்றவிவரங்களை தீர்க்கதரிசனங்களாக இயேசு கூறுதல்.

இந்த மேற்கண்ட அனைத்து விவரங்களை நாம் கூர்ந்து கவனித்தால், இயேசு தம் இரட்சிப்பை முழுமைப்படுத்திச் சென்றார் என்பதை சுலபமாக அறிந்துக்கொள்ளலாம். இதனை அறிய பெரிய பட்டப்படிப்போ, பல ஆண்டுகால பைபிள் கல்லூரி படிப்போ தேவையில்லை. புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகத்திலிருந்து, வெளிப்படுத்தின விசேஷம் வரை தனக்கு புரியும் மொழியில் படிக்கும் எந்த ஒரு சராசரி மனிதனும் (முஸ்லிமும்) புரிந்துக்கொள்வான்.

இப்போது நாம் இரண்டு விவரங்களைக் கண்டோம்:

**முதலாவது,** இயேசு தமக்கு பிறகு “ஒரு தீர்க்கதரிசி” வருவார் என்று கூறவில்லை, அதற்குப்

பதிலாக பரிசுத்த ஆவியானவர் வருவார் என்று கூறினார். பரிசுத்த ஆவியானவரும் அவர் கூறியபடியே வந்தார்.
**இரண்டாவதாக,** இயேசு தம் இரட்சிப்பை முழுவதுமாக 100 சதவிகிதம் முழுமைப்படுத்தியே சென்றார்.
எனவே, புதிய ஏற்பாட்டின் படி:

1) முஹம்மது என்ற பெயரில் ஒருவர் வருவார் என்று புதிய ஏற்பாடு கூறவில்லை, இயேசுவும் கூறவில்லை. கூறினால் அது ''பொய்'' என்பதை அறியுங்கள். உங்கள் பைபிள் முஹம்மது பற்றி கூறுகிறது என்று இஸ்லாமியர்கள் கூறினால், ''நம்முடைய தாய் மொழியில் பைபிளை படிக்கும் நம்மிடமே வந்து நம்மை வஞ்சிக்க'' அவர்கள் முயற்சி எடுக்கிறார்கள் என்பதை அறியுங்கள். தன்னுடைய வேதத்தை (குர்-ஆனை) தன் தாய் மொழியில் படிக்க அவ்வளவாக விரும்பாத இஸ்லாமியர்கள் நம் தாய் மொழியில் நாம் படிக்கும் வேதத்தை நமக்கு கற்றுக்கொடுக்க வருவது என்பது எவ்வளவு வேதனைக்குரியது என்பதை கவனியுங்கள்.

அடுத்த கேள்விக்கு போவோம்.
**கேள்வி 3:** என் பெயர் சாமுவேல், என்னுடைய கேள்வி என்னவென்றால், புதிய ஏற்பாட்டின் படி ''முஹம்மது ஒரு தீர்க்கதரிசி'' இல்லை என்பது உண்மை, அப்படியானால், புதிய ஏற்பாடு முஹம்மதுவை எப்படி காண்கிறது? வேறு வகையில் சொல்லவேண்டுமானால், **புதிய ஏற்பாட்டின் படி நாம் ''ஹசரத்முஹம்மதுவை'' எப்படி அழைக்கலாம் அல்லது புதிய ஏற்பாட்டின் படி ''அவர் யார்?''.**

**சகோ. ஜான்சன்:** மிகவும் அருமையான கேள்வியை கேட்டுள்ளீர்கள். இந்த கேள்விக்கு விடையை காண்பதற்கு முன்பாக, நான் உங்களிடம் ஒரு 100 ரூபாய் நோட்டை தருகிறேன், அதனை உங்களிடம் உள்ள 100 ரூபாய் நோட்டுடன் ஒப்பிட்டுப்பார்த்து நான் உங்களிடம் கொடுத்த நோட்டு நல்ல நோட்டா? என்பதை பார்த்துச் சொல்லுங்கள்.
(சகோதரர் ஜான்சன் ஒரு 100 ரூபாய் நோட்டை கேள்வி கேட்டவரிடம் தருகிறார், அதனை அவர் வாங்கி தன்னிடம் இருக்கும் 100 ரூபாய் நோட்டுடன் ஒப்பிடுகிறார், இப்போது சகோதரர் ஜான்சன் மறுபடியும் பேசுகிறார்)

**சகோ.ஜான்சன்:** நான் கொடுத்த நோட்டுடன் உங்கள் நோட்டை ஒப்பிட்டீர்களா?

**சகோ.சாமுவேல்**: ஆம் நான் ஒப்பிட்டேன்.

**சகோ.ஜான்சன்:** சரி, முடிவு என்ன?

**சகோ.சாமுவேல்:** நீங்கள் கொடுத்த நோட்டு, இந்திய அரசாங்கம் அச்சடித்த நோட்டு அல்ல.

**சகோ. ஜான்சன்:** சரி, இதனை எப்படி கண்டுபிடிச்சீங்க?

**சகோ.சாமுவேல்:** என்னிடமுள்ள நோட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன், ஆகையால் அது அரசாங்கம் அச்சடித்த நோட்டு இல்லை என்பதை கண்டுபிடித்தேன்.

**சகோ.ஜான்சன்:** சரி, அது நல்ல நோட்டு இல்லை என்றுச் சொல்லிவிட்டீர்கள், அதற்கு இன்னொரு பெயர் என்ன?

**சகோ.சாமுவேல்:** ம்ம்ம்ம் நல்ல நோட்டு இல்லையானால், அதற்கு பெயர் ''கள்ள நோட்டு''...

**சகோ.ஜான்சன்:** சரியாக பதில் சொன்னீங்க. இப்போது பைபிளின்படி முஹம்மது ''தீர்க்கதரிசி'' இல்லை என்று நிருபணமாகிவிட்டதால், அவரை பைபிள் எப்படி அழைக்கும்?

**சகோ.சாமுவேல்:** ம்ம்ம்.... ''கள்ளத் தீர்க்கதரிசி'' என்று பைபிள் அழைக்கும்...

**சகோ.ஜான்சன்:** சரியாகச் சொன்னீர்கள். பைபிளின் படி முஹம்மது ஒரு ''கள்ளத் தீர்க்கதரிசி'' ஆவார்.
இயேசு தமக்கு பின்பு அனேக கள்ளத்தீர்க்கதரிசிகள் வருவார்கள் என்று எச்சரித்துள்ளார். அவர்கள் கூடுமானவரை கிறிஸ்தவர்களையும் ஏமாற்றுவார்கள் என்றும் கூறியுள்ளார். புதிய ஏற்பாடு அனேக இடங்களில் இப்படிப்பட்ட கள்ளத் தீர்க்கதரிசிகள் வருவார்கள், அவர்களை விசுவாசிக்கவேண்டாம் என்று எச்சரிக்கிறது.
**முதலாவதாக, பைபிள் ''ஹசரத் <u>முஹம்மதுவை'' கள்ளத் தீர்க்கதரிசி என்று அழைக்கிறது:</u>**

புதிய ஏற்பாடு முஹம்மதுவை ''கள்ளத் தீர்க்கதரிசி'' அல்லது ''பொய் தீர்க்கதரிசி'' என்று பட்டம் சூட்டுகிறது என்பதை எல்லா கிறிஸ்தவர்களும் மனதில் வைக்கவேண்டும். கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள் உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (மத்தேயு 7:15)

அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக் காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே் அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும். (2 கொரிந்தியர் 11:13-15)

**இரண்டாவதாக, பைபிள் அவரை ''பொய்யர்'' என்று கூறுகிறது:**

பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவன் பொய்யன் என்று வேதம் கூறுகிறது. முஹம்மது ''பிதாவையும் குமாரனையும் மறுதலித்தார்'', ஆகையால், இதன் அடிப்படையில் நாம் பார்த்தால், பைபிள் முஹம்மதுவை ''பொய்யன்'' என்ற பெயரையும் சூட்டுகிறது.

இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து. குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடைவனல்ல, குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான். ஆகையால் ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள். நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். உங்களை வஞ்சிக்கிறவர்களைக் குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.(1 யோவான் 2: 22-26)

**மூன்றாவதாக, பைபிள் அவரை ''சபிக்கப்பட்டவன்'' என்று அழைக்கிறது**

கீழ்கண்ட வசனங்களின் படி, பைபிள் கூறும் நற்செய்தியை அல்லாமல் ''வேறு ஒரு நற்செய்தியை'', ''வேறு ஒரு இயேசுவை'' மனிதர்களுக்குப் போதிக்கிறவன், அவன் மனிதனாக இருந்தாலும் சரி, வானத்திலிருந்து வருகின்ற தூதனாக இருந்தாலும், ''அவன் சபிக்கப்பட்டவன்'' என்று பைபிள் கூறுகிறது.

உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன் வேறொரு சுவிசேஷம் இல்லையே் சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன் நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். (கலாத்தியர் 1:6-9)

ஆக, புதிய ஏற்பாட்டின் படி முஹம்மது ''ஒரு பொய்யர்'', ''கள்ள தீர்க்கதரிசி'' மற்றும் ''சபிக்கப்பட்டவர்'' ஆவார். இஸ்லாமியர்களின் மனம் புண்படும் என்று நாம் இவைகளை மறைத்துவைத்தால், சாத்தான் நம்மை வஞ்சிக்க நாமே அவனுக்கு வழி வகுத்து கொடுக்கிறவர்களாக கர்த்தரின் பார்வையில் காணப்படுவோம்.

முஸ்லிம்கள் விரும்புகிறார்களோ இல்லையோ, நம்முடைய வேதம் கூறுவதை நாம் நம்பவேண்டாமா? ''இயேசு தேவகுமாரன் இல்லை'' என்று இஸ்லாமியர்கள் கூறுகிறார்கள், கிறிஸ்தவர்கள் துக்கப்படுவார்களே என்று அவர்கள் நினைத்து, நம்மிடம் ''இயேசு இறைவன் தான்'' என்று கூறுகிறார்களா என்ன? இல்லையல்லவா? அதே போலத்தான், சத்தியம் சத்தியமே. அதனை சொல்வது நம்முடைய கடமை.

அடுத்த கேள்விக்கு போவோம்.

**கேள்வி 4:** என் பெயர் எஸ்தர். எனக்கு ஒரு இஸ்லாமிய தோழி இருக்கிறாள், அவள் என்னிடம் ''முஸ்லிம்களாகிய நாங்கள் உங்கள் இயேசுவை மதிக்கிறோம், கவுரப்படுத்துகிறோம், அதே போல **நீங்கள் ஏன் ஹஜரத் முஹம்மதுவை மதிப்பதில்லை, கவுரப்படுத்துவதில்லை''** என்று கேட்கிறாள்? இதற்கு நான் எப்படி பதில் கூறுவது?

**சகோ. ஜான்சன்:** உங்கள் தோழியிடம், ''மதிப்பு, மரியாதை, கவுரவம்'' என்றால் என்ன? என்று கேளுங்கள்.

இயேசுவை அவர்கள் மதிக்கிறார்கள் என்றுச் சொல்வது ''மிகப் பெரிய வஞ்சகமாகும்''. "ஒருவரை நாங்கள் மதிக்கிறோம்'' என்பது எப்படி வஞ்சகமாகும்? என்ற கேள்வி முஸ்லிம்களுக்கு எழலாம், இதனை நான் இப்போது விளக்குகிறேன்.

## இயேசுவிற்கு கவுரவம் எது?

முதலாவதாக, ஒருவரை நாம் மதிக்கிறோம் என்றுச் சொன்னால், அவர் இருக்கின்ற வண்ணமாகவே நாம் அவரை மதிக்கவேண்டும். அதாவது, இயேசுவை இஸ்லாமியர்கள் மதிக்கிறார்கள் என்றுச் சொன்னால்,

“இயேசு இறைக்குமாரனாக இருக்கிறார், அந்த ஸ்தானத்தில் அவரை மதித்தால்” அது உண்மையாக கவுரமாகும். இயேசு தேவகுமாரன் என்பதை மறுத்துவிட்டு, அவரது போதனைகள் பொய் என்றுச் சொல்லி குற்றப்படுத்திவிட்டு, கிறிஸ்தவர்களை ஏமாற்றுவதற்காக, “நாங்கள் உங்கள் இயேசுவை மதிக்கிறோம்” என்று இஸ்லாமியர்கள் கூறுவது எப்படி உண்மையான கவுரமாகும்? இது வஞ்சகம் அல்லவா?

**முஹம்மதுவிற்கு கவுரவம் எது?**

இன்னொரு உதாரணத்தை இஸ்லாமிய நிலையிலிருந்து பார்ப்போம். அதாவது, கிறிஸ்தவர்களாகிய நாம் கீழ்கண்டவாறு சொல்கிறோம் என்று வைத்துக்கொள்வோம், இதனை இஸ்லாமியர்கள் எப்படி காண்பார்கள்? “எங்கள் முஹம்மதுவை கிறிஸ்தவர்கள் எவ்வளவாக மதிக்கிறார்கள் பார்த்தீர்களா?” என்று சந்தோஷப்படுவார்களா? அல்லது வஞ்சகம் என்பார்களா?

1) கிறிஸ்தவர்களாகிய நாங்கள் உங்கள் முஹம்மதுவை உங்களைவிட அதிகமாக மதிக்கிறோம், கவுரப்படுத்துகிறோம்.
2) ஹஜரத் முஹம்மது ஒரு நல்ல மனிதர், நேர்மையானவர்.
3) ஹஜரத் முஹம்மது ஒரு இறைத்தூதர் அல்ல, அவர் ஒரு சாதாரண மனிதர் மட்டுமே.
4) ஹஜரத் முஹம்மதுவை ஜிப்ராயீல் தூதர் சந்திக்கவில்லை.
5) ஹஜரத் முஹம்மதுவிற்கு இறைவனிடமிருந்து தூதுகள் வரவில்லை.
6) ஹஜரத் முஹம்மதுவிற்கு குர்-ஆன் இறங்கியது என்று இஸ்லாமியர்கள் சொல்வது சுத்தப் பொய்யாகும், ஹஜரத் முஹம்மதுவிற்கு அப்படிப்பட்ட வெளிப்பாடு ஒன்றும் வரவில்லை.
7) ஹஜரத் முஹம்மதுவை நாங்கள் அதிகமாக மதிக்கிறோம், கவுரப்படுத்துகிறோம்.

மேற்கண்ட விதமாக கிறிஸ்தவர்கள் ஹஜரத் முஹம்மதுவைப் பற்றி கூறி, பார்த்தீர்களா நாங்கள் எவ்வளவு அதிகமாக ஹஜரத் முஹம்மதுவை மதிக்கிறோம் என்றுச் சொன்னால், முஸ்லிம்கள் ஒப்புக்கொள்வார்களா?

ஹஜரத் முஹம்மது ஒரு இறைத்தூதர் என்று நம்பி, அவருக்கு குர்-ஆன் இறக்கப்பட்டது என்று நம்பி, பிறகு அவரை நாங்கள் மதிக்கிறோம் என்று கிறிஸ்தவர்கள் சொன்னால் அது உண்மையான கவுரவமாக இருக்குமே ஒழிய, ஹஜரத் முஹம்மதுவின“நிலையை” அதாவது அவரது நபித்துவத்தை மறுத்துவிட்டு, குர்-ஆனை மறுத்துவிட்டு, அவரை மதிக்கிறோம் என்று கிறிஸ்தவர்கள் சொன்னால், அது எப்படி மரியாதை செலுத்துவதாகும்? என்று இஸ்லாமியர்கள் கூறுவார்கள்.

இதே போலத்தான், இயேசுவின் தெய்வத்தன்மையை மறுத்துவிட்டு, அவர் உண்மையாக யாராக இருந்தார் என்பதை மறுத்துவிட்டு, அவரது போதனைகளை உள்ளடக்கிய பைபிளை குற்றம் கூறிவிட்டு, பலவீனமான கிறிஸ்தவர்களிடம் வந்து “நாங்கள் உங்கள் இயேசுவை மதிக்கிறோம்” என்றுச் சொல்வது எப்படி உண்மையான மரியாதையாக கருதப்படும்?

**கிறிஸ்தவர்களே, எச்சரிக்கை...எச்சரிக்கை...**

சாத்தனுடைய சூழ்ச்சிகளை முற்றிலும் அறிந்தவர்களாக, இப்படிப்பட்ட இஸ்லாமிய வாதங்களை நம்பவேண்டாம் என்று உங்களை எச்சரிக்கிறேன்.

உங்களுடைய நித்தியம் சம்மந்தப்பட்ட விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இனி எந்த இஸ்லாமியராவது , “நாங்கள் உங்கள் இயேசுவையும், அவரது தாயாகிய மரியாளையும், உங்களை விட அதிகமாக கவுரப்படுத்துகிறோம்” என்று உங்களிடம் கூறினால். அதற்கு நீங்களும், “ஆமாம், நாங்களும் உங்கள் ஹஜரத் முஹம்மதுவை மதிக்கிறோம், அவர் ஒரு நல்ல மனிதர் ஆனால், இறைத்தூதர் அல்ல, அவருக்கு குர்-ஆன் இறங்கவில்லை, ஆனாலும்,அவர் நல்ல மனிதர், நாங்கள் அவரை அதிகமாக கவுரப்படுத்துகிறோம்” என்று சொல்லிப் பாருங்கள். மரியாதை என்றால் என்ன கவுரவம் என்றால் என்ன என்பதை அவர்கள் புரிந்துக்கொள்வார்கள்.

இயேசுவை யாராவது கவுரப்படுத்த விரும்பினால், பைபிள் “அவரை” எப்படி அடையாளம் காட்டுகிறதோ அதன் படி அவரை கவுரப்படுத்துங்கள்.

ஹஜரத் முஹம்மதுவை யாராவது கவுரப்படுத்த விரும்பினால், குர்-ஆனும், ஹதீஸ்களும் அவரை எவ்விதம் அடையாளம் காட்டுகின்றதோ அதன் படி அவரை கவுரப்படுத்துங்கள்.

இவ்விருவருடைய மூல ஆதாரங்களை மறுதலித்துவிட்டு, தங்கள் சொந்த நூல்களின் படி அவரை கவுரப்படுத்த முயன்றால், அது ”வஞ்சகமாகும்”. இந்த இடத்தில் ஒரு விஷயத்தை கூறிக்கொள்கிறேன், “கிறிஸ்தவர்களாகிய நாங்கள் ஹஜரத் முஹம்மதுவை “முஹம்மது நபி (Prophet Muhammad)” என்ற நிலையில் மதிப்பதில்லை, முஹம்மதுவை “திரு. முஹம்மது (Mr. Muhammad)” என்ற நிலையில் மதிக்கிறோம்” அவ்வளவே.

**முடிவுரை:** இந்த பாகத்தில் “புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் ஹஜரத் முஹம்மதுவின் நபித்துவத்தைப் பற்றிய சிறு குறிப்பைக் (கேள்வி பதில்களாக) கண்டோம், அடுத்த பாகத்தில் பழைய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் முஹம்மதுவின் நபித்துவத்தைப் பற்றி இன்னும் மேலதிக விவரங்களைக் கர்த்தருக்கு சித்தமானால் காண்போம்...

தமிழ் கிறிஸ்தவ உலகமே... கடைசி காலங்களில் அனேக வஞ்சகர்கள் எழும்பி, தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பார்கள் என்று வேதம் எச்சரிக்கிறது... இஸ்லாமியர்களின் வஞ்சக வார்த்தைகளை நம்பி ஏமாறவேண்டாம் என்பதை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை இந்த கட்டுரையை படிக்கும் நீங்கள் ஒரு கிறிஸ்தவ போதகராக இருப்பீர்களானால், "உங்கள் மீது உங்கள் ஆடுகள் பற்றிய கணக்கு கேட்கப்படும் என்பதையும், ஆடுகளை மேய்ப்பதில், அவர்களை சரியான ஞானத்தில் நடத்துவதும் உங்கள் கடமை என்பதையும் கவனத்தில் கொள்ளவும்". இஸ்லாம் பற்றி உங்கள் சபை விசுவாசிகளுக்கு எச்சரிக்கையிடும் படி கேட்டுக்கொள்கிறேன்.

**பயனுள்ள இணையதள முகவரிகள்:**

இஸ்லாம் குறித்த கிறிஸ்தவக் கட்டுரைகளுக்கு:
**www.answering-islam.org**
**www.tamilchristians.com**

குர்-ஆன் ஐ இணையதளத்தில் வாசிக்க:
**www.thiruquran.com/**

**இஸ்லாம் குறித்த நடப்புச் செய்திகள் மற்றும் காணொளி (Video) காண:**
**www.iemtindia.com**

**மேலதிகத் தொடர்புகளுக்கு மற்றும் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள:**
islamaskqa@yahoo.com
iemtindia@gmail.com

## இஸ்லாமியரின் இரட்சிப்பில் உங்கள் பங்கு என்ன?

இச்சிறிய புத்தகத்தின் நோக்கம் இஸ்லாமியரின் மீது வெறுப்பையும் பகைமையையும் உண்டாக்குவது அல்ல. மாறாக, அவர்களை நேசித்து, நமக்கு இரட்சிப்பை நல்கின இறைவன் அவர்களையும் இரட்சிக்கும்படி அவர்களைக் குறித்த ஆத்தும பாரமும், அவர்கள் கேட்கக் கூடிய கேள்விகளைக் குறித்த விழிப்புணர்வும் உண்டாக வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

இஸ்லாமியர் இயேசுவைச் சரியாக அறிந்து இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், குறைந்தபட்சம் அதற்காக தனியாகவோ அல்லது குழுவாகவோ ஜெபியுங்கள்.

நீங்கள் சபைப் போதகராக இருந்தால் உங்கள் சபையிலும் இஸ்லாமியரின் இரட்சிப்பைக் குறித்த தேவனின் பாரத்தை பகிர்ந்து கொள்ளுங்கள், ஜெபியுங்கள். இஸ்லாமியர் மத்தியில் அனேக ஊழியர் எழும்புவதற்காக ஜெபியுங்கள்.

அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம். ஆதலால், அறுப்புக்கு எஜமான் (அறுவடையின் எஜமான்) தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் (மத்தேயு.9:34,35).

### என்ன செய்ய வேண்டும்?

1. இஸ்லாமியர்களையும் தேவன் நேசிக்கிறார் என்று அறிந்து அவர்களை நேசியுங்கள். (யோவான்.3:16)
2. இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பின் செய்தியை அவர்களிடம் அறிவிக்க ஆயத்தமாகுங்கள்.
3. இஸ்லாமியரின் இரட்சிப்புக்காகவும், அவர்கள் இயேசு அருளும் மெய்யான சமாதானத்தையும் சந்தோசத்தையும் பெற்றுக் கொள்ள ஜெபியுங்கள்.
4. கிறிஸ்துவின் அன்பை அவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.
5. அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு சாந்தத்தோடும் வணக்கத்தோடும் பொறுமையாக பதில் அளியுங்கள்.
6. எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களிடம் வாக்குவாதம் செய்யாதீர்கள்.
7. தேவன் அவர்கள் மனதில் கிரியை செய்து, சத்தியத்தை அறிந்து கொள்ளும்படி அவர்கள் கண்களைத் திறக்க உங்கள் வார்த்தைகள் பரிசுத்த ஆவியானவராலும், ஜெபத்தாலும் நிறைந்திருக்கட்டும்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். .....விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. (ரோமர்.1:16).

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள். ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். (1பேதுரு.5:8)